1979 மார்ச் 20]

(ஆ) மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.—அடுத்து, திருவாளர்கள், ஜே. ஜேம்ஸ், மா. மணிமாறன், க. மருதாசலம், மு. அம்பிகாபதி, துரை-முத்துசாமி, வி. கே. ராஜு, பெ. சு. திருவேங்கடம், சின்னசேலம், மா. சுப்பிரமணியம், ப. பொன்னு ரங்கம், எஸ். ஜே. சாதிக்பாட்சா, இரெ. இராசமாணிக்கம், பண்ணை கே. சேதுராமன், பி.ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தே. ஞானசிகாமணி, கு. ரமணி, வீ. கே. கோதண்டராமன் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள், திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ்.—பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு முழுவதும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்.—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அரசு நம்மாநிலத்திற்கு மாதந்தோறும் சராசரி 33,000 கிலோ லிட்டரிலிருந்து 35,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை 1978ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்து வந்தது. 1979 சனவரி திங்களுக்கு 37,015 கிலோ லிட்டர், பிப்ரவரித் திங்களுக்கு 34,009 கிலோ லிட்டர், மார்ச் திங்களுக்கு 34,487 கிலோ லிட்டர் என்ற அளவில் தமிழகத்திற்கு இந்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. பிப்ரவரி, மார்ச் ஆகிய இரு மாதங்களிலும் சனவரி மாதத்தோடு ஒப்பிடும்போது 3,000 கிலோ லிட்டர், அதாவது 30 இலட்சம் லிட்டர் அளவில் குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஈரானில் ஏற்பட் டுள்ள குழப்ப நிலைமை காரணமாக சர்வதேசச் சந்தையில் மண்ணெண்ணெய்க்கு மிகக் கிராக்கி ஏற்பட்டுள்ளதெனவும் மண்ணெண்ணெய் உபயோகப்படுத்தப்படுவதை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்றும், மாநிலங் களுக்கு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண் ணெய்யின் அளவு கடந்த ஆண்டு இதே மாதத்தில் எவ்வளவு மண்ணெண்ணெய் உபயோகப்படுத்தப்பட்டதோ அந்த அளவைக்காட்டிலும் 8 விழுக்காடு அளவுக்கு மேற்படாத வகை யில்தான் மாத ஒதுக்கீடு அமையுமென மத்திய அரசு தெரிவித் துள்ளது. மேலும் மண்ணெண்ணெய் விநியோகத்தில் உன்னிப்பான கவனம் செலுத்தும் படியும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1979 மார்ச் 20

மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யும் அளவைக் குறைத்துள்ள காரணத்தினால் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்படுமென அஞ்சி இந்த அரசு தமிழகத்திற்கு கடந்த சனவரி மாதத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் அளவை எடுத்துக்காட்டி அந்த அளவில் குறைப்பு எதுவும் செய்யாமல் ஒதுக்கீடு செய்யும்படி கேட்டுக்கொண்டு உள்ளது. இக்கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால் மேலும் 3000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் கூடுதலாக கிடைக்கும். தமிழகத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் குடும்பங்கள் சமையல் வாயுவை பயன் படுத்தி வருகின்றன. அண்மையில் சமையல் வாயு இனி 35 நாட்களுக்கு ஒரு முறைதான் கொடுக்கப்படும் என்று இந்திய ஆயில் நிறுவனத்தினர் அறிவிப்பை ஒட்டி சமையல் வாயுவை உபயோகிப்பவர்கள் தங்களின் தேவைக்கு முன் எச்சரிக்கையாக மண்ணெண்ணெய்யை கூடுதலாக வாங்க முற்பட்டுள்ளதும் மண்ணெண்ணெய் தேவை அதிகரித்துள்ளதற்கு ஒரு காரணம்.

தமிழகத்திற்கு ஒதுக்கீட்டை அதிகரிக்க மத்திய அரசை வற்புறுத்தியுள்ளோம். தட்டுப்பாடு ஏற்படாமல் கண்காணிக்க விழிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நெருக்கடி எதுவும் ஏற்பட்டு விடுமென்ற அச்சத்திற்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மத்திய அரசு ஏற்கனவே கொடுத்து வந்த அளவை குறைத்திருந்தாலும் கூட —தவிர்க்க முடியாத காரணத்தால் இந்த அளவை குறைத்திருந்தாலும் கூட வீடுகளுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய்யில் தட்டுப்பாடு எதுவும் இருக்கக் கூடாது, வேண்டுமென்றால் பல்க்-கன்ஸம்ஷன்னில் வேண்டுமென்றால் ஓரளவு குறைத்துக் கொள்ளலாம் என்ற பொதுவான கருத்து எங்கும் இருந்து வருகிறது. அதோடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் சரியாக செயல் படாததின் காரணமாகத்தான் இப்போது வீடுகளுக்கு சரியான மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய முடியவில்லை என்ற குறைபாடு பொதுவாக இருந்து வருகிறது. ஏழை மக்களின் வீடுகளில் விளக்கேற்றுவதற்கு, ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாத வகையில், அவர்களுடைய வீடுகளில் விளக்கேற்றி வைப்பதற்கு— ஏழை எளிய மக்கள் அதிகமாக மண்ணெண்ணெயை உபயோகித்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மண்ணெண்ணெய்யை ஒழுங்காக விநியோகம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா? இப்போது ரேஷன் கார்டு மூலமாக விநியோகம் செய்யப்போவதாக அரசு அறிவித்திருக்கிறது. பல ஏழை எளிய மக்களிடம் இப்போது ரேஷன் கார்டு கிடையாது. காரணம் அவர்கள் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் கடைகளில் விற்கின்ற விலையை விட குறைந்த விலைக்கு அரிசி ஓப்பன் மார்க்கெட்டில் கிடைப்பதால் ஏழை எளிய மக்கள் ரேஷன் கார்டுகளை பாதுகாத்து வைத்திருக்கவில்லை. ஆகவே ஏழை எளிய மக்களுக்கு எளிதான முறையில் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை அரசு செய்யுமா ?

1979 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம். வேண்டுமென்றே கொடுத்த அளவைக் குறைத்திருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. மத்திய அரசுக்கு கிடைக்கின்ற அளவு குறைந்திருக்கின்ற காரணத்தாலே, அவர்கள் தமிழ் நாட்டிற்கு அளவைக் குறைத்திருக்கிறார்கள். ஆகவே, உரிய வர்களுக்கு மண்ணெண்ணெய் தேவையான அளவு இல்லை. உரியவர்களுக்கு நியாயமான அளவு கொடுக்க வேண்டுமென்ற முறையிலே துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது மாண்புமிகு உறுப்பினர் சேம்ஸ் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் எடுக்கக்கூடிய இந்த நடவடிக்கைகளிலே எந்த விதமான குபைாடுகளும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட அதிகமான விலைக்கு மண்ணெண்ணெயை விற்ற வியாபாரிகளை, ஊழியர்கள் மிகவும் விழிப்போடு இருந்த காரணத்தினால், அப்படி திருட்டுத்தனமாக விற்ற வியாபாரிகளைப் பிடித்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கார்டு களுக்கு எண்ணை கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி இன்றைய தினம் பத்திரிகைகளிலே கூட அவர்கள் பார்த்திருப்பார்கள். அப்படி இருக்கக்கூடிய இந்த நிலைமைகளை யெல்லாம் பார்த்து, அதைப் பற்றியும் கவனிப்பார்கள். இந்த மண்ணெண்ணை விநியோகம் செய்வதிலே, உணவுத்துறை பரிசீலித்து தக்க நடடிக்கைகளை துரிதமாக எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது 16 உறுப்பினர்கள் கொடுத்திருக் கிறார்கள். எனவே, ஒவ்வொருவரும் பேசாமல், கேள்வியாக கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 30 லட்சம் லிட்டர் குறைத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால், நேற்று வந்த மத்திய அரசின் எரிபொருள் பெட்ரோலியம் அமைச் சர் அவர்கள் பேசுகின்றபோது, மாநிலங்களுக்கு கோட்டாவைக் குறைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச். சொல்லிவிட்டு, பற்றாக்குறைகளுக்கு காரணம் பெட்ரோலுடன் மண்ணெண்ணை கலப்பதால் தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்ற ஒரு குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசு அப்படி கலப்படம் செய்யப்படுபவர்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க முன் வருமா? மத்திய அரசு அமைச்சர் அவர்கள் முழு அளவையும் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். அது உண்மையா, தவறா என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

மேலும் கிராமங்களில் இன்றைக்கு மண்ணெண்ணை இல்லா மல், தெரு விளக்குகளையே நம்பி வாழ்வதால், கிராமங்களிலே உள்ள வீடுகள் எல்லாம் இருட்டாக இருக்கின்றன. உடனடியாக,

கிராமங்களில் மின்சார விளக்குகள் ஒழுங்காக எரிவதற்காவது ஒழுங்கான முறையைக் கடைப்பிடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் முதவிலேயே சொன்னேன் சுருக்கமாகப் பேசுங்கள் என்று. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மண்ணெண்ணையைப் பற்றிய விவரங்களைக் கொடுத்தார்கள். ஆனால், நீங்கள் மின்சாரத்திற்குப் போகிறீர்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணை தலைவர் அவர்களே, மைய அரசின் பெட்ரோலிய அமைச்சர் அவர்கள் மாநிலங்களுக்கு மண்ணெண்ணையின் அளவு குறைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னதாக பத்திரிகையில் செய்தி இல்லை. நான் பார்த்ததாகவும் ஞாபகம் இல்லை. விநியோகம் செய்கின்ற பொறுப்பு மாநில அரசைச் சார்ந்தது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னொன்று, மத்திய அரசு இந்த எண்ணையை மாநிலங்களுக்குக் கொடுக்கின்ற நேரத்தில், அதை நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம் கொடுப்பதில்லை. அதை இந்தியன் ஆயில் வியாபாரிகளிடம்தான் கொடுக்கிறார்கள். ஆகவே, அவர்களைக் கண்காணிக்கின்ற பொறுப்புதான் உணவுத்துறைக்கு இருக்கின்றதே தவிர, அதை விநியோகிக்கின்ற முறை இன்னும் எங்கள் கைக்கு வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

* திரு. க. மருதாசலம்: துணைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு முழுவதும் ஏழை, நடுத்தர மக்கள் ஆகியவர்களுக்குப் பயன்படக் கூடிய இந்த மண்ணெண்ணை கிடைப்பதில்லை என்னுடைய தொகுதியைப் பற்றிய கருத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கோவையிலே மிகப் பெரிய வியாபாரியான டி.வி. அண்டு பிரதர்ஸ், இரவு நேரங்களில் லாரிகளில் மக்களுக்குப் பயன்படும் மண்ணெண்ணையைக் கடத்திக் கொண்டு, வெளியூர்களுக்குச் சென்று அதை விற்று கொள்ளை லாபம் அடிக்கின்றார்கள். அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற போது, திருட்டுத்தனம் செய்யும் வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, கோவையிலே திருட்டுத்தனம் செய்கின்ற இந்த டி. வி. அண்ட் பிரதர்ஸ் என்று சொல்லுகின்ற இந்த நிறுவனத்தின் மீது கடுமையான நடவடிக்கையை எடுப்பார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மருதாசலம் அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துச் சொன்னதற்காக, அவருக்கு இந்த அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக அப்பேர்ப்பட்ட விபாரியின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எதபன்ய இந்த நேரத்தில தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 20] [திரு. க. உரொ. எட்மண்ட்]

*திரு. மு. அம்பிகாபதி: மத்திய அரசு கொடுத்து வந்த அளவைக் குறைத்தது ஒன்று. வரி விதித்திருப்பது இரண்டாவது. இரண்டும் சேர்ந்து மண்ணெண்ணை கிடைப்பது பாதிக்கப்பட்டிருக்கிறது. மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி, தஞ்சாவூர், கும்பகோணம் ஆகிய பகுதிகளிலே மண்ணெண்ணை கிடைக்க வில்லை. எனக்கும் மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கட்கும் தந்திகள் குவிந்து கொண்டிருக்கின்றன. மத்திய அரசு மண்ணெண்ணை மீது வரி விதித்தது, மாநில அரசு நெருப்புப் பெட்டி மீது வரி விதித்தது. இரண்டு பேரும் சேர்ந்து விளக்கணைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். மக்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவும், தீப்பெட்டியின் மீதுள்ள சுமையைப் போக்கவும் நீங்கள் முறையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஈரான் மண்ணெண்ணெய் கொடுக்கவில்லை என்று சொன்னால் சோவியத் யூனியன் நாங்கள் கொடுக்கத் தயார். இந்தியாவில் விளக்கெரிய வைக்கத் தயார் என்று சொல்லியிருக்கிறது. மத்திய அரசிடம் போராடி முழுமையான கோட்டாவைப் பெற மாநில அரசு முன் வருமா? மண்ணெண்ணெய் மீது போடப்பட்டுள்ள வரியை ரத்து செய்யப் போராடத் தயாரா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ரஷ்ய நாடு கூடுதலான அளவு மண்ணெண்ணெய் தர ஒப்புக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே எடுத்துச் சொன்னார்கள். பத்திரிகைகளிலும் பார்த்தேன். அப்படி வருகிற நேரத்தில் நிச்சயமாக கூடுதலான மண்ணெண்ணெயை நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று நிச்சயமாக இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தும்.

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது லிட்டர் ரூ. 1.44 என்று விற்பதற்குப் பதிலாக லிட்டர் ரூ. 1.60 பைசா என்று விற்றவர்கள் மீது வழக்குப் போட்டதாகச் சொன்னார்கள். அப்படி வழக்குப் போடப்பட்டவர்கள் அவ்வளவு பேரும் வெளியிலே வந்து விட்டார்கள் என்பது தெரியும் என்று நினைக்கிறேன். ரேஷன் மூலமாக மண்ணெண்ணெய் கொடுப்பதாகச் சொன்னார்கள். சிமென்டுக்கு பர்மிட் சிஸ்டம் வந்த பிறகு விலை ஏறிவிட்டது. மண்ணெண்ணெய்க்கு ரேஷன் கொண்டு வருவதன் காரணமாக பதுக்கலும், கலப்படமும் ஏற்பட வழி இருக்கிறது. அத்தியாவசியப் பண்டங்களை அதிகமான விலைக்கு விற்கக்கூடிய வியாபாரிகளுக்கு அதிகமான தண்டனை கொடுக்கக்கூடிய முறையில் அவர்கள் ஜாமீனில் வெளிவர முடியாதபடி ஒரு கடுமையான சட்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு. அவர்களை ஜாமீனில் விடுவது நீதிமன்றங்களின் பொறுப்பு.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இன்றைய தினம் விவசாயிகள் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி ஆயில் என்ஜின் ஓட்டு கிறார்கள். க்ரூட் ஆயில் கிடைக்கவில்லை. நியாய விலையில் மண்ணெண்ணெய் கிடைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அநியாய விலையில் விற்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லுகிற நேரத்தில் நியாய விலையில் மண்ணெண்ணெய் கிடைக்க உத்தரவாதத்தை இந்த அரசு கொடுக்கிறது என்பதைத்தான் அது காட்டுகிறது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : சென்னை நகரம் முழுவதற்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் டெப்போக்கள் மூலம் எண்ணெய் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். எவ்வளவு டெப்போக்கள் இருக்கின்றன ? 24 டெப்போக்கள் என்றும் 50 டெப்போக்கள் என்றும் சொல்லப்படுகிறது. அந்த டெப்போக்களின் சரியான எண்ணிக்கை என்ன ? ரேஷன் கார்டுகள் இல்லாதவர்கள் என்ன செய்வது ? ரேஷன் கார்டுகள் மூலம் வழங்கும் அதே நேரத்தில் தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் வியாபாரம் செய்வதைத் தடை செய்தால்தான் பதுக்கல் குறையும். சென்னையைப் பொறுத்தவரை ரேஷன் கார்டு முறையைக் கூறியிருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை என்ன நிலை ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கு எண்ணெய் கொடுப்பது என்பது மத்திய அரசு எடுத்திருக்கும் முடிவு. மத்திய அரசு எடுத்திருக்கும் முடிவை மாற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. ரேஷன் கார்டு பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய கோட்டா ஜனவரி முதல் மார்ச் வரை 3,000 கிலோ லிட்டர்ஸ் என்று இருக்கிறது. மத்திய அமைச்சர் ஒழுங்காகப் பதில் சொல்லியிருகிறார்—இந்து நிருபர்—We have provided quota for all the States and it is upto them to ensure proper marketing and distribution.' என்று சொல்லுகிறார். கேரளாவில் உரிய நடவடிக்கை அட்வான்ஸ ஆக எடுத்ததன் காரணமாக தட்டுப்பாடு இல்லை. நம்முடைய மாநிலத்தில் அப்படி நடவடிக்கை எடுக்காததன் காரணமாக சென்னையில் எண்ணையே இல்லையென்ற நிலைமை இருக்கிறது. யாருக்கும் கிடைக்கவில்லை. ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். ஆமை வேகத்தில் நிர்வாகம் இருப்பதால் இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. திரு. ராவ் ஒழுங்கான விவரங்களைக் கொடுத்திருக்கிறார்.

1

979 மார்ச் 20] [திரு. ப. பொன்னுரங்கம்]

[முற்பகல் 11-20]

அந்த பிகர்தான். இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன் ரீஜனல் மானேஜர் கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்கே காரணம் உரிய நடவடிக்கைகளை மாநில அரசு உஷாராக எடுக்காதது தான் என்பது மத்திய அமைச்சர் பகுகுணா வர்களின் பதிலிலிருந்து தெரிகிறது. ஏனென்றால் கேரளா விலே உஷாராக நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள், அந்த முறையிலே தட்டுப்பாடு ஏற்படாமல் இனிமேலாவது மாநில அரசு விழிப்பாக தக்க நடவடிக்கை எடுக்குமா? உடனடியாக அந்த ஏழைகளுக்கு, அதுவும் ஏழைகளின் பொருள்தான்; புயல் வந்ததற்குப் பின்னாலே நாம் அவர்களுக்குக் கொடுக்கிற முதல்பொருள் கிரோசின் தான்; அந்தக் கிரோசினைத் தட்டுப்பாடு இல்லாத நிலைமையிலே கொடுக்க ஏற்பாடு செய்யுமா? ஆமை வேகத்தைப் போக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: துணைத் தலைவர் அவர்களே, மத்திய எரிபொருள் துறை அமைச்சர் அவர்கள் நிருபர்களுக்குச் சொன்ன செய்தியை மாண்புமிகு உறுப்பினர் இங்கே படித்தார், "we have provided quota" என்று தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்களேயொழிய வழக்கம் போல் கொடுக்கிற கோட்டாவைக் கொடுத்திருக்கிறோம் என்றோ அல்லது முன்னாலே கொடுத்ததைவிட குறைத்துக் கொடுத்து இருக்கிறோம் என்றோ சொல்லவில்லை. அவர்கள் தப்பித்துக் கொள்வதற்காக அப்படிச் சொல்லி இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, விநியோகிக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கிறது என்று பழியை மாநில அரசின்மீது வேறு போட்டிருக்கிறார்கள்.

திரு. கே. பண்ணை சேதுராம்: துணைத் தலைவர் அவர்களே, இந்திய மைய அரசு மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிற மண்ணெண்ணெயைக் காட்டிலும் தமிழகத்திற்குக் குறைவாக ஒதுக்கி இருக்கிறது என்ற செய்தி வருகிறது. குறிப்பாக, மகாராட்டிரம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களுக்கு அதிகமான கோட்டாவும் தமிழகம் போன்ற மாநிலங்களுக்குக் குறைவாகவும் ஒதுக்கி இருப்பதாகத் தகவல் வருகிறது. அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது இரண்டு லட்சம் குடும்பங்களுக்கு சமையலுக்காக மண்ணெண்ணெ கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். சாக்கடை ஓரங்களிலே புழுக்களாகத் துடித்துக் கொண்டிருக்கிவர்களுக்கு விளக்கு ஏற்றி வைப்பதற்குக் கூட மண்ணெண்ணெய் கிடைக்காத நிலைமையில் விளக்குக்குக் கூட எண்ணெ இல்லாத நிலைமையில் அவர்கள் அதிகமாகக் கொடுத்து வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் இரண்டு லட்சம் பேர்களுக்குக் கொடுப்பதைவிட சாக்கடை ஓரங்களிலே புழுக்களாக வாழ்ந்து கொண்டிருந்த அந்த ஏழை மக்களுக்கு அதிகமாகக் கிடைக்க செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: துணைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணை விளக்கு எரிப்பதற்காகவும் பயன் படுத்தப்படுகிறது, எருபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது, என்பதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, இதிலே ஏழைகள், பணக்காரர்கள் என்று பார்ப்பதற்கு நியாயம் இல்லை. யார் யார் விளக்கு எரிப்பதற்காக பயன்படுத்துகிறார்களோ அவர்களும் பயன்படுத்தவேண்டும். அதைப்போலவே எரிபொருளாகப் பயன் படுத்துவதற்கும் மண்ணெண்ணை கிடைக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை வாணிபக் கழகம் எடுத்துக் கொண்டு இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனிடம் ஒப்படைக் கப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், அவர்கள் வாங்கியதற்குப் பிறகு சில்லரை வியாபாரிகளிடம் கொடுப்பதற்குப் பதிலாக, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கும் கிராமங்களிலே கூட்டுறவுச் சங்களு களிலே ஒப்படைப்பதற்கும் அதன் மூலம் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கும் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்து, பிறகு சில்லறை வியாபாரிகளுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக வாணிபக் கழகத்திடம் கொடுக்கவேண்டுமென்று அவர் கள் சொல்வதைவிட மத்திய அரசு இண்டியன் ஆயில் கார்ப்ப ரேஷன் மூலம் டீலர்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக மாநில அரசுக்கு வாணிபக் கழகத்திற்கு கொடுப்பார்களா என்று கேட்டு இருப்பார்களானால் பொறுத்தமாகவும் இருக்கும், பாராட்டுக் குரியதாகவும் இருந்திருக்கும்.

(2) தகவல் கோரல்—தொடர்ச்சி

(2) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகளை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்

திரு. து. புருஷோத்தமன்: சார், சென்னையிலே தியாகராய நகரிலே

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். 41 அல்லது 42வது விதிகளின்கீழ் கொடுத்தவைகள் என்ன ஆயிற்று என்பதைத் தவிர வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். அவைகள் எல்லாம் ஆய்விலே இருக்கும்.